**ARTICLE 56 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 111–120

# சங்க கால மருதநில வேளாண் பயிர்களும், தொழிலும்

## Agricultural Crops and Occupations in the Marutham Landscape during the Sangam Era

**முனைவர் மா.சத்யராஜ்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த் துறை
கே. எஸ். ஆர் பொறியியல் கல்லூரி
திருச்செங்கோடு- 637215
தொ.எண். 97872 51510
இ.முகவரி : masathyaraj@gmail.com

### Abstract

Agriculture was central to the economic, social, and cultural development of Sangam-age Tamil society. Fertile river valleys and Marudha plains, enriched by abundant water, rich soil, and irrigation facilities, became the heartlands of production. Rivers such as the Kaveri, Vaigai, Tamiraparani, Bhavani, Amaravati, and Noyyal sustained this growth. Sangam literature and archaeological evidence reveal the diversity of crops, farming methods, tools, and occupations. Rice and sugarcane dominated the Marudha lands, while red rice (Sennel), white rice (Vennel), millet (Kambu), Varagu, sorghum (Cholam), green gram (Pachai Payaru), and beans (Mochai) were also cultivated. Tools like the plough (Kalappai), iron ploughshare (Er), irrigation channels (Nanjil), yoke (Nugam), sickle (Arival), grinding stone (Ammi), digging stick (Kuzhavi), water-lift (Etram), and threshing floor (Thalampu) illustrate technological progress. Sites such as Porunthal, Sivakalai, Kodumanal, Adichanallur, Keeladi, and Uraiyur provide evidence of production and storage. Agriculture thus underpinned food security, trade, social organization, and governance.

**Keywords:** நெல் (Nel – Paddy), கரும்பு (Karumbu – Sugarcane), ஏர்கலப்பை (Erkalappai – Iron Plough), உழவர் (Uzhavar – Farmers), மருத நிலம் (Marudha Nilam – Fertile River Plains), குறிஞ்சி நிலம் (Kurunji Nilam – Hill Tracts), தொல்லியல் (Tholliyal – Archaeology), கல்வெட்டு (Kalvettu – Inscriptions), அறுவடை (Aruvadai – Harvest), வணிகம் (Vanikam – Trade)

### ஆய்வுச் சுருக்கம்

சங்ககாலத் தமிழகத்தின் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியில் வேளாண்மை முக்கிய பங்கு வகித்தது. வளமான நீர்வளம், செழிப்பான மண் மற்றும் பாசன வசதிகளால் ஆற்றுச் சமவெளிகளும் மருத நிலப்பகுதிகளும் உற்பத்தியின் மையங்களாக விளங்கின. காவிரி, வைகை, தாமிரபரணி, பவானி, அமராவதி, நொய்யல் போன்ற ஆறுகள் வேளாண் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன. சங்க இலக்கியம் மற்றும் தொல்லியல் சான்றுகள் மூலம் பயிர்கள், வேளாண் முறைகள், கருவிகள் மற்றும் தொழில்கள் பற்றிய தகவல்கள் வெளிப்படுகின்றன. மருத நிலங்களில் நெல் மற்றும் கரும்பு முக்கிய பயிர்களாக இருந்தன; செந்நெல், வெண்ணெல், கம்பு, வரகு, சோளம், பச்சைப்பயறு, மொச்சை போன்ற பயிர்களும் பயிரிடப்பட்டன. கலப்பை, ஏர், நாஞ்சில், நுகம், அரிவாள், அம்மி, குழவி, ஏற்றம், தளம்பு போன்ற கருவிகள் தொழில்நுட்ப முன்னேற்றத்தை காட்டுகின்றன.

## முன்னுரை

மனித பரினாம வளர்ச்சியில் புதிய கற்காலத்தில் வேளாண்மைத் தொழில் குழுக்களாக இணைந்து தொடங்கப்பட்டன. தொடக்கக் காலத்தில் மழை நீரைப் பயன்படுத்தி கல்லால் உருவாக்கப்பட்ட கூர்மையான கைக்கோடரியால் பூமியை உழுது அல்லது புறட்டி விதைகள் விதைக்கப்பட்டு வேளாண் தொழில் செய்யப்பட்டன. வேளாண்மை முதன் முதலில் குறிஞ்சி நிலப் பகுதி வேளாண்மை செய்வதற்கு ஏற்ற இடமாக இருந்தமையால் முதன் முதல் மலைசார்ந்த பகுதிகளிலேயே வேளாண்மைத் தொழில் தொடங்கியதை சங்க இலக்கியங்கள் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றன. இங்கு தினை, வரகு, சாமை, கொள்ளு, பச்சைப்பயிறு, துவரை, மொச்சை ஆகிய பயிரிகள் விளைச்சல் செய்யப்பட்டமை தெரிய வருகிறது. மேலும் தானியங்களை இடிக்க கல்லைப் பயன்படுத்தி உள்ளான். பையம்பள்ளி, ஓடுகத்தூர். (சு.இராசவேலு, கோ.திருமூர்த்தி,(1995),தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள், ப.15) ஆகிய இடங்களில் இவை கண்டுபிடிக்கபட்டதாக இராஜவேலு குறிப்பிடுகிறார். தமிழகத்தில் வேளாண்மையில் நெல்லின் பயன்பாடும் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பாகவே இருந்ததை தொல்லியல் சான்றுகள் மெய்பிக்கின்றன. ஆதிச்சநல்லூர், சிவகளை, கீழடி, பொருந்தல் ஆகிய அகழாய்வு இடங்களில் நெல் கிடைத்திருப்பது இலக்கியங்கள் குறிப்பிடுவதை மெய்பிக்கின்றன.

இரும்புக் காலத்தில் வேளாண் கருவியாக ஏர்கலப்பையின் கூர் முனைகள் அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆதிச்சநல்லூர், கொடுமணல், சென்னானூர், கீழடி ஆகிய அகழாய்வு இடங்களில் ஏர்முனைக் கருவிகளும் கதிர் அறுக்கும் அறுவாள்களும் குறுமுனைக் கத்திகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஏரின் இரும்புக் கலப்பையை மரக்குச்சியில் இணைத்து அதனைப் பயன்படுத்தியும் உள்ளனர். சென்னானூரில் கிடைத்த ஏர்முனை கெட்டியான இரும்பால் செய்யப்பட்டுள்ளது. இதனை கையால் பிடித்தவாறே நிலத்தைக் கொற்றிப் பண்படுத்தி இருத்தல் வேண்டும். கிருஷ்ணகிரி அருகில் மேலுமலைத் தொடரில் எட்றப்பள்ளி மேல்பள்ளம் என்ற இடத்தில் ஏர் உழுகின்ற காட்சி வெள்ளை நிறத்தில் ஓவியமாகத் திட்டப்பட்டுள்ளதை மனோன்மணி கே.பி. முருகன் மற்றும் அவரது குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். (மனோன்மணி, (2009), ஏரின்றி அமையாது உழவு, செம்மொழி செய்திமடல்-4) இவ்வோவியத்தில் ஏர்க்கலப்பையை ஒருவர் இயக்கிய நிலையில் இரண்டு மாடுகளை நுகத்தடியில் பூட்டி ஏர் உழும் காட்சி மிக அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. ஏர்க்கலப்பை நுகத்தடியுடன் காளைகளின் கழுத்தின் மேல் உள்ளவாறும் ஏரினை உழவர் உழுவதற்கு ஏற்ற கைப்பிடியையும் ஏர் நிலத்தில் உழுகின்ற கொழுவும் இவ்வோவியத்தில் காட்டப்பட்டிருப்பது சிறப்புடையது. இவ்வோவியம் இரும்புக்காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம் என தொல்லில் அறிஞர்கள் கருதுகின்றனர்.

வேளாண் நிலங்கள் அதன் தன்மைக்கேற்ப நன்னிலம், வன்புலம். மென்புலம், புண்புலம், படப்பை, முரம்பு, கரம்பை உவர் நிலம் பழனம், புலம். எனப் பிரிக்கப்பட்டன. வேளாண் தொழில் வளர்ச்சி பெற்று அபரிவிதமான உற்பத்திக் பெறுகியபோது நான்கு நிலங்களில் வேளாண் பொருள்கள் பண்டமாற்று முறையிலான வணிகம் தொடங்கியது. ஏர்கலப்பைகளை

செய்து விற்போர் குறித்து அழகர்மலைத் சங்கக் கால தமிழிக் கல்வெட்டில் 'கொழு வணிகர் எளசந்தன்' என்று குறிப்பிடுவதன் மூலம் கொழு எனப்படும் இரும்பாலான ஏர்க்கலப்பையை எலசந்தன் என்பவர் விற்பனை செய்கின்ற வணிகராக இருந்துள்ளார் என கூறுகிறது. Iravatham Mahadevan, ( 2014 ), Early Tamil Epigraphy, p.441)

## வேளாண் தொழில்

மேற்குறித்த தொல்லியல் சான்கள் கூறியது போல் சங்க கால தமிழ் நாட்டில் வேளாண்மைக்கு சிறந்த இடமாக மருத நிலச் ஆற்றுச் சமவெளிப்பகுதிகளில் வேளாண் தொழில் நடைப்பெற்றதை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தமிழகத்தில் காவிரி, வைகை, தாமிரபரணி, பவானி, அமராவதி , நொய்யல் ஆகிய ஆறுகள் மருத நிலப் பயிர்கள் செழிக்கக் காரணமாக இருந்திருக்கின்றன. காவிரியும் அதனுடைய கிளை நதிகளும் காவிரி சமவெளியான சோழநாட்டு மருத நிலத்தில் பாய்ந்து வளமை உள்ள நாடாக உருவாக்கியிருக்கின்றன. கரிகாலன் காவிரி ஆற்றின் கரைகளை உயர்த்தினான். இதனால் சோழநாடு வேளாண்மைத் தொழில் பெருக ஏதுவாக இருந்தன. சங்க காலச் சோழநாட்டில் ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் செந்நெல் விளைந்ததாகப் பொருநராற்றுப்படை எனக் குறிப்பிடுகிறது. நன்செய் வேளாண்மையைச் செய்யக் கூடிய மருதநிலப் பகுதியில் வேந்தர்கள் தோன்றியிருக்கின்றனர் என்பதிலிருந்து அரசு உருவாக்கத்தில் மருதநிலம் முக்கியப் பங்கு வகித்திருக்கின்றது. சீறூர் மன்னர்களும், கிழார்கள் தோன்றியதும் மருத நில வேளாண் சமூகத்தில் என்பது குறிப்பிடத்தக்கது.

## மருத நில பயிர்கள்

நெல், கரும்பு இரண்டும் மருத நிலத்தின் விளைபயிராக இருந்திருக்கின்றன. இவ்விரண்டும் நாட்டின் முக்கிய வருவாய்ப் தரக்கூடிய தொழிலாக இருந்திருக்கின்றன. நெல் முதன்மையான நன்செய் பயிராகும். சங்க காலத்தில் ஐவன நெல், தோரை நெல், மூங்கில் நெல் ஆகியவை குறிஞ்சி முல்லை நிலங்களில் விளையக் கூடிய நெல் ஆகும். செந்நெல், வெண்நெல், மருத நிலத்திற்குரிய நெல் வகையாகும். சங்க இலக்கியங்களில் 102 இடங்களில் நெல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றது. அவற்றில் மருத நிலத்தில் விளையக்கூடிய செந்நெல், வெண்ணெல் பற்றிச் சங்க இலக்கியப் பாடல்கள் சுட்டுகின்றன. குறிப்பாக புறநானூ மற்றும் பதிற்றுப் பத்தில் பல இடங்களில் இடம் பெறுவதை பின்வருமாறு;

“அலங்கு செந்நெல் கதிர் வேய்ந்த
ஆய் கரும்பின் கொடிக் கூரை” (புறம்.22:14,15)

என புறநானூற்றில் அசைந்த செந்நெல்லின் ஒழுங்குடைய கூரை வேயப்பட்டது என்று கூறுகிறது.

“வேங்கை மலரின் வண்ணம் ஒத்த
செந்நெல் விளைந்த வயலின் பயனை,
எருதுகளால் உழுது விளைவித்த
செந்நெல்லைப் பொருநனுக்குப் போரோடு
வழங்கினான் அதியமான் நெடுமான் அஞ்சி” (புறம்.390:22)

என அதியமான் நெடுமான் அஞ்சி பொருநனுக்கு வேங்கை மலர்களைப் போன்ற, எருதுகளால் உழுது விளைவிக்கப்பெற்ற செந்நெல்லைப் போரோடு கொடுத்தான் என்றும்,

“அறுவடைத் தொழில்செய் மகளிர்,
நெற்களத்தின்கண் எருமை கடாவிட,
மிதித்துதிர்த்த மெல்லிய செந்நெல்
குவியல்களை மரக்கால் செருகி,
அளந்தனர் மகிழ்ந்து” (பதி.71:1-5)

என அறுவடைத் தொழில் செய்யும் உழவர் மகளிர் நெற்களத்தின்கண் எருமைகள் கடாவிடப்பட்டு மிதித்துதிர்த்த மெல்லியச் செந்நெற்குவியல் மரக்கால்களை அளப்பதற்குச் செருகி வைத்தனர் என்று பதிற்றுப் பத்திலும்,

“பெரிய செந்நெல்லின் தூம்புடைய திரண்ட தாளை
அறுத்துத் தொழில் செய்வர் உழவர்;
மருத மரத்தின் நிழலிடத்தே
தெய்வங்கள் பலி பெறும் களங்களிலே,
அறுத்த செந்நெல்லைக் குவியலாக்கி
போரெென இடுவர்” (பெரு.228-233)

என பெரிய செந்நெல்லினுடைய தூம்புடைய திரண்ட தாளையறுத்துத் தொழில் செய்வர். மருதமரத்து நிழலிலே தெய்வங்கள் பலி பெறுகின்ற களங்களிலே போராக இடுவர் என்றும்,

“உலர்ந்த பெரிய செந்நெல்லின்
அரிசிச் சோற்றினைப் பாணர்
உண்டு மகிழ்ந்தனர்” (பெரு.473,474,479).

என உலர்ந்த பெரிய செந்நெல்லினுடைய அரிசிச் சோற்றினைப் பாணர் உண்டனர் என்று பெரும்பாணாற்றுப்படையிலும், பட்டினப்பாலையில்

‘காய்ந்த செந்நெற் கதிர்களை எருமைகள் தின்றன’ (பட்.13).

என காய்ந்த செந்நெற் கதிர்களை எருமைகள் தின்றன என்று உள்ளது. செந்நெல்லைப்போல் வெண்ணெல்லும் மருத நிலத்தில் விளைவிக்க கூடிய நெல் வகைகளில் ஒன்றாகும். வெண்ணெல் பற்றி

‘வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி’ (பெரும். 255)
‘வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ’ (மலை. 471)
‘நெடு வெண்ணெல்லின் அரிசி முட்டாது’ (மலை. 565)
‘குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்’ (புறம். 33:5)
‘வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇக்’ (புறம். 348:1)
‘மாவண் தித்தன் வெண்ணெல் வேலி’ (புறம். 352:9)
‘அடுமகள் முகந்த அளவா வெண்ணெல்’ (புறம். 399:1)
என சங்க இலக்கியத்தில் பேசப்படுன்றன. நெல்லை அறுவடை செய்கின்ற உழவரைக்
‘நெல்லை அரிகின்ற உழவர்’ (புறம். 24:1)
என புறநானூறு குறிப்பிடுகிறது.

“குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய” (புறம். 24:21-23)
என்று புறநானூறும்,

'நெல் விளை கழனி படுபுள் ஓப்புநர்' (புறம். 29:13)

என புறப் பாடல் நெல் விளையும் வயலில் வந்து அமரும் பறவைகளை உழவர்கள் ஓட்டுவர் என்று குறிப்பிடுகிறது.

"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது,
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே " (புறம். 335:9–12)

என நடுகல் வழிபாட்டில் நெல்லைத் தூவி வழிபடும் மரபு நிலவியதைப் புறப் பாடல் வழையாக அறிந்து கொள்ளமுடிகிறது.

'பிணிக் கதிர், நெல்லின் செம்மல் மூதூர்' (புறம். 97:18)
'நெல்விளை கழனி அம்பர் கிழவோன்' (புறம். 385:9)

என்று நெல்லை அடிப்படையாகக் கொண்ட ஊர்களும் மன்னர்களும் புகழப்படுதலை அறியமுடிகிறது. மேற்குறித்த நெல் வகைகள் பற்றி சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டின் வழியாக சங்க காலத்தில் இருந்த நெல் வகைகள் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது.

சங்க இலக்கியங்கள் பெருமளவு நெல் பற்றிய சான்றுகள் இருந்தாலும் சில நேரங்களில் தொல்லியல் சான்றுகள் அவற்றை மெய்பிக்க உதவுகின்றன. திண்டுகல் அருகில் உள்ள பொருந்தலில் பேராசிரியர் க.இராஜன் அகழாய்வு மேற்கொண்டுள்ளனர். அவற்றில் நான்கு கால்களுடன் கூடிய மண்ஜாடியில் நெல்லின் உமி கண்டுபிடிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்பு தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் சிறப்பம்சமாகும். (கா.ராஜன்(2010), சங்காலம்:தொல்பொருள் ஆய்வுகள்,ப.110) இந்த நெல்லின் காலம் கரிமக்காலக் கணிப்பின்படி கி.மு.496 எனக் கணித்துள்ளனர். மேற்குறித்த தொல்லியல் சான்றுகள் சங்க காலத்தில் நெல் வேளாண் உற்பத்தில் பெருமளவு இருந்ததை அறிந்துகொள்ள முடிகிறது.

உழுவோரைப் பற்றி பல சொற்கள் இலக்கியத்தில் காணப்படுகின்றன. அகவர் (பொரு 220), உழவர் (குறு.155:1,பதி.20:22, புறம்.13: 11, 395:1, அகம்.366:8), உழவன் (குறு.131: 5,181:4, புறம். 230:3, 289 :3), ஏராளர் (ப.76:11), ஏரின்வாழ்நர் (புறம்.375:6), ஏரோர் (சிறு. 233), தொழுவர் (நற்.195:6,புறம்.24: , 209:2, 379:3) என்ற பெயர்கள் வந்துள்ளன. களமர் எனும் சொல் உழவர் எனும் பொருளில் கையாளப்படுவதாக பெ.மாதையன் குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும். (பெ.மாதையன்,(2004),சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம்,ப.ப.30-33) களமர் என்னும் சொற்றடர் இலக்கியங்களில் பொரு.194, மது. 260, மலை. 469, நற். 125: 9, அகம். 366:3,புறம், 387:25, பரி.தி. 1: 27 இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.

உழவுத் தொழில் செய்வோரைக அரிஞர்(அகம்.84:12, புறம்.348:1), அரிநர் (பதி. 19:22, ஐங்.190:2), அரிவணர் (நற்.400:3), அரிவார்(குறு.375:4),கடைசியர்(புறம்.61:1), களமர்-வயற்பணி செய்வோர்(பொரு.194,மது.260,மலை.469, நற்.125: 9,அகம்.366:3), உழுதுண்போர் (பரி.தி.1:27), உழுதுண்பார் (புறம்.387:25), தொழுவர் - வினைஞர்(நெடு.49) போன்ற சொற்றடர்கள் குறிப்பிடுகின்றன.

உழவுத் தொழிலுக்கு தேவைபடும் கருவிகள் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. கலப்பை (அகம். 41: 4, 194:2, புறம். 33:4, 338:1, பதி.14:17,

குறு.173,மலை.60), உழுபடை- கலப்பை (புறம். 35:25), நாஞ்சில்-ஏர்(அகம்.42:5, கலி. 8:5,பதி.19:17, 25:1, 26: 2, 58:17,பரி.1:5, 4:39, 20: 53, புறம்.9:11, 20:11, 56: 4, 140:1, 380:9, பெரும்.199), கலப்பை(பெரும்.188), கொழு(பொரு.117,பதி.58:17), நுகம்-நுகத்தடி (பெரும்.62, பட். 206, மலை.515, நற்.58:11, அகம். 224: 4,329:6,350 6, 400:10,புறம். 102:1,179:9)

## கரும்பு

மருத நிலத்தில் நெல்லைப் போலவே கரும்புச் சாகுபடியை முக்கியத் தொழிலாகக் கொண்டனர். தமிழகத்திற்குக் கரும்பை அறிமுகப்படுத்தியவர்களாகத் தகடூரை ஆட்சி செய்த அதியமானின் முன்னோர்கள் என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

"அரும்பெறல் மரபின் கரும்புஇவண் தந்தும்,
நீர்அக இருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபின்நின் முன்னோர் போல" (புறம்.99:1-4)
எனவும், மருத நிலத்தில் செந்நெல்லும், கரும்பும் விளைந்திருந்ததைப் பட்டினப்பாலை
"வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்
கராஅங்கலித்த கண்ணகன் பொய்கைக்" (பட்.240-242).

என வெள்ளிய பூக்களையுடைய கரும்புகளுடன் செந்நெல்லும் சேர்ந்து வளர்ந்து பண்டைக் காலத்தில் ஒன்றாக இணைந்து ஒரே இடத்தில் ஊடுபயிராகக் சாகுபடி செய்யப்பட்டன. மருதநிலத்தில் விளைந்த கரும்பைப் பிழிந்துச் சாறெடுக்கும் முறையை

பற்றி நன்கு அறிந்திருந்தனர் என்பதனை பெரும்பாணாற்றுப்படை
"எந்திரம் சிலைக்கும் துஞ்சா கம்பலை
விசயம் அடூஉம் புகை சூழ் ஆலைதொறும்
கரும்பின் தீம் சாறு விரும்பினிர் மிசைமின்" (பெரு.260-262)

என்று குறிப்பிடுகிறது. சங்க இலக்கியங்களில் கரும்பு பற்றிய குறிப்புகள் பல இடங்களில் பேசப்படுவதைப் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன (பொரு.193, 216, பெரு.262, மது.258,பட்.9,162,240,மலை.119,341,பதி.13:3, 13:13, 30:14, 50:3, 75:6, 87:4, புறம்.16:15, 22:15, 24:13, 28:12, 35:10,42:15, 99:2,137:6, 322:7, 384:3, 386:10, 392:21). கரும்பு மருத நிலத்தில் பயிர் செய்யப்பட்டதையும், மக்கள் கரும்பை பயன்படுத்தியதையும், கரும்பிலிருந்து சாறு பிழிந்ததுப் பற்றியும், கரும்பு தமிழகத்திற்கு வெளிநாடுகளிலிருந்து வந்ததையும் மேற்குறித்த சங்க இலக்கியங்களின் சான்றுகளின் படிஅறிந்துகொள்ள முடிகிறது.

கரும்பு அரவை இயந்திரம்

சங்க கால வேளாண் சமூகத்தில் ஆண்டு முழுவதும் கரும்பு அறுவடை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கரும்பிலிருந்து சாறுபிழிய இயந்திரங்களைப் பயன்படுத்தினர்.

'அமர்எனின், திங்களும் நுழையா எந்திரப் படுபுழைக்' (புறம்.177:5)
'தெண்ணீர்ப் படுவினும் தெருவினும் திரிந்து' (புறம்.332:7)

இரு இடங்களில் கரும்புச் சாறு பிழிய ஆடும் போது எழுகின்ற ஓசை யானை பிளிருவது போல் இருக்கும் எனப் சுட்டப்படுகின்றது. பேரொலியை எழுப்புவதைக் கொண்டு பெரிய இயந்திரங்களைப் பயன்படுத்தியிருக்கக் கூடும் என்று கருதமுடிகிறது.

## உழவுக் கருவிகள் செய்யும் தொழில்

சங்க இலக்கியப் அகப், புறப்பாடல்களில் பெரும்பான்மையான இடங்களில் போர், வீரம் பற்றியே பாடல்கள் உள்ளன. அவ்வாறிருந்த போதிலும் வேளாண் நிலம் பற்றியும் அவர்கள் மேற்கொண்ட வேளாண் தொழில் பற்றியும், பயன்படுத்திய கருவிகள் பற்றியும் செய்திகள் கிடைக்கின்றன. மருத நிலம் வயலும் வயல் சார்ந்த இடம் ஆகும். நன்செய் நிலம் மருதம் எனப்படும். விவசாயிகளை உழவர் என்றும் அவர்களின் மனைவியரை உழத்தியர் என்று கூறுவதுண்டு. உழவு அவர்களின் தொழில் , தாமரை முதன்மை மலர், இந்திரன் கடவுளாவான். உழவர்கள் நிலத்தை உழவேண்டும், எருவிட வேண்டும் நாற்று நடவேண்டும், நீர்ப்பாசனம் ஏற்பாடு செய்யவேண்டும், மாடுகள் மேய்ந்திடாமல் காத்தல் வேண்டும் வேளாண் சமூகத்தில் தொழிலுக்கென பல்வேறுபட்ட கருவிகளைக் கொண்டு தொழில் முனைந்தனர். வேளாண் தொழில் தொடர்புடைய தொழில்கள் மருத நிலத்தில் நடைபெற்றிருந்ததை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சங்க கால மக்கள் தங்களுடைய நிலத்திற்கு ஏற்றவாறு வேளாண் கருவிகளை வடிவமைத்துக்கொண்டனர். பயிர்த் தொழிலுக்குப் பயன்பட்ட கருவிகளான கலப்பை, உருளை முதலியவற்றை வைத்துப் பாதுகாக்க தனித்தனிக் கொட்டில்கள் இருந்தன என்பதை,

“களிற்றுத் தாள் புரையும் திரி மரப் பந்தர்,
குறுஞ் சாட்டு உருளையொடு கலப்பை சார்த்தி” (பெரு.188-189).

பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

மரவேலை செய்வோர் தச்சர் எனப்பட்டனர். தச்சுத் தொழில் சேய்வொரே சங்க காலத்தில் உழவுக்கும்,வேளாண்மைக்கும் தேவையான கருவிகளை செய்து கொடுத்துள்ளதை இலக்கியங்கள் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது. தச்சர்கள் செய்த சில வேளாண் கருவிகளை பற்றி பின்வரும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

### உழுகருவி

பண்டைக் காலம் தொட்டுத் தமிழகத்தில் நிலங்களை உழுவதற்கு ‘மரக்கலப்பை’ கொண்டு எருதுகளைப் பூட்டி உழவு செய்தனர். கலப்பை நாஞ்சில் என்ற சொல்லாலும் கையாளப்பட்டுள்ளது. நாஞ்சில் ஈரப்பதம் இல்லாத நிலத்தில் (குறிஞ்சி, முல்லை) உழும் கலப்பை என்பது குறிபிடத்தக்கது. வேளாண் தொழிலில் நாஞ்சிலைப் பயன்படுத்தியுள்ளனர்.

“பிடி வாய் அன்ன மடி வாய் நாஞ்சில்
உடுப்பு முக முழுக் கொழு மூழ்க ஊன்றி” (பெரு.199-200)

என பெரும்பாணாற்றுப்படை மரக்கலப்பை என்ற நாஞ்சில் பெண்யானையின் வாய் போன்றும், அதில் உள்ள கொழு உடும்பின் வாய் போன்றும் இருப்பதாகக் குறிப்பிடுகிறது.

### நீர் இறைப்புக் கருவி

ஆற்றில் நீர் குறையும் போது ஆற்றுக் குட்டைகளிலும், கிணறுகளிலும், குளத்திலும் உள்ள நீரை நிலங்களுக்குப் பாய்ச்சுவதற்கு ‘ஏற்றம்’ என்ற கருவியைப் பயன்படுத்தினர். ஏற்றம் பெரும்பாலும் மரத்தால் செய்யப்பட்டிருக்கும், ஏற்றத்துடன் இரும்பாலான ‘சால்பொரி’ என்ற கருவி

மூலம் நீர் இறைக்கப் பயன்படுத்தினர். கிணற்றில் இறைக்கும் போது எருதுகளைப் பயன்படுத்தும் பழக்கமும் இருந்திருக்கிறது. நீர் இறைக்க ஏற்றம் பயன்படுத்தியதை மதுரைக்காஞ்சி

“நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்
பாடுசிலம்பு மிசையேற்றத்” (மது.90)

எனக் குறிப்பிடுகிறது.

## தளம்பு

நன்செய் நிலத்தை உழுதபின் மேடுபள்ளம் இல்லாமல் சமமாக இருக்கும் பொருட்டு பரம்புப் கொண்டு சமன்படுத்துவர். புன்செய் நிலத்தைச் செம்மைப் படுத்தும் கருவிக்குப் ‘தளம்பு’ என்று பெயர் இவற்றை புறநானூறு

‘மலங்கு மிளிர், செறுவின் தளம்பு தடிந்து இட்ட’ (புறம்-61:3)

என சேற்று வயலைச் சமன்படுத்தும் போது ‘தளம்பில்’ மீன்கள் அகப்பட்டுத் துண்டுபடுவதை மாடலன் மதுரைக் குமனர் பாடியுள்ளார்.

மேற்குறித்த இலக்கியச் செய்திகளைக் கொண்டு தமிழ் நாட்டில் கொடுமணல் அகழாய்வில் கிடைத்த சில பயிர்களின் எச்சங்கள் ஆய்விற்கு அனுப்பப்பட்டதில் கம்பு, வரகு, சோளம், பச்சைப்பயறு, மொச்சை ஆகிய புன்செய் பயிர்களும் வெண்டை, இலந்தை ஆகிய செடி, மரப் பயிர்களும் பயிரிடப்பட்டன என்பதை அறிய முடிகிறது. மேலும் ஒரு வகையான தாவரத்திலிருந்து எடுக்கப்பட்ட நாரில் நூற்கப்பட்ட துணியும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. சிவகளை அகழாய்வில் முதுமக்கள் தாழியில் கிடைத்த உமி நீக்கப்பட்ட நெல்லை ஆய்வு செய்ததில் இதன் காலம் அறிவியல் காலக் கணக்குப்படி கி.மு.1155 எனத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அறிவித்துள்ளது.

அகழாய்வுகளில் வேளாண்மைக்குத் தேவையான கருவிகள் கிடைத்துள்ளன. நெல்லை அறுக்கப் பயன்படும் சிறிய அரிவாள் ஆதிச்சநல்லூர், பெரும்பேர், கொடுமணல், கீழடி, பல்லாவரம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. மேலும் ஆதிச்சநல்லூரில், சானூர் அகழாய்வுகளில் தானியத்தை அரைக்கும் அம்மி, குழவி ஆகியவை கிடைத்துள்ளன. ஆதிச்சநல்லூர் அகழாய்வில் நான்கு கால்களுடன் கூடிய அம்மிக்கல் கிடைத்துள்ளது. சங்ககால சோழர்களின் தலைநகரமாக விளங்கிய உறையூரில் தானியங்களைச் சேகரித்து வைக்கும் கொள்கலன்கள் ஒன்று செங்கல்லால் கட்டப்பட்டிருந்தமை அகழாய்வின் மூலம் வெளிப்பட்டது.

சோழ நாட்டின் தலைநகரமான உறையூரில் வீட்டில் சேகரிக்கப்பட்டிருந்தமை உபரி உற்பத்தித் திறனைக் காட்டுகிறது. கரூர் மற்றும் கீழடி அகழாய்வில் தானியம் வைக்கும் சேமிப்புப் பானைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதே போன்று காவேரி கரையின் அருகிலுள்ள திருக்காம்புலியூர் என்னும் இடத்தில் செய்யப்பட்ட அகழாய்வில் தானியங்களைச் சேமித்து வைக்கும் தானியக் கிடங்கு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. (சு.இராசவேலு, கோ.திருமூத்தி, (1995), தமிழ்நாட்டு தொல்லியல் அகழாய்வுகள்) பொ.ஆ.மு.300 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வரிச்சியூர் தமிழிக் கல்வெட்டில் 100 கலம் நெல் பற்றிய குறிப்பு உள்ளதை

ஐராவதம் மகாதேவன் சுட்டிக்காட்டுகின்றார். (Iravatham Mahadevan, *Early Tamil Epigraphy*,p.171)

சங்க காலத் தமிழகத்தின் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியில் வேளாண்மைத் தொழில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. குறிப்பாக ஆற்றுச் சமவெளிகளும் மருத நிலப்பகுதிகளும் நீர்வளம், வளமான மண் மற்றும் பாசன வசதிகளைக் கொண்டிருந்ததால் வேளாண் உற்பத்திக்கான முக்கிய மையங்களாக விளங்கின. காவிரி, வைகை, தாமிரபரணி, பவானி, அமராவதி, நொய்யல் போன்ற ஆறுகள் வேளாண் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன. குறிப்பாக காவிரி மற்றும் அதன் கிளைநதிகள் சோழநாட்டின் மருத நிலங்களை வளப்படுத்தியதுடன், உபரி வேளாண் உற்பத்திக்கும் வழிவகுத்தன. கரிகாலன் காவிரிக் கரைகளை உயர்த்தியதாகக் கூறப்படும் செய்தியும் நீர்வளம் மற்றும் வேளாண்மைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

சங்க இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் நெல் மற்றும் கரும்பு ஆகியவை மருத நிலத்தின் முக்கியப் பயிர்களாக விளங்கியுள்ளன. செந்நெல், வெண்ணெல் போன்ற நெல் வகைகள் பரவலாகப் பயிரிடப்பட்டதுடன், கரும்புச் சாகுபடியும் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றிருந்தது. கரும்பிலிருந்து சாறு பிழியும் இயந்திரப் பயன்பாடு வேளாண்மையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் வெளிப்படுத்துகிறது.

தொல்லியல் அகழாய்வுகள் சங்க இலக்கியச் செய்திகளுக்கு வலுசேர்க்கும் வகையில் நெல், கம்பு, வரகு, சோளம், பச்சைப்பயறு, மொச்சை போன்ற பயிர்களின் எச்சங்களையும், அரிவாள், கலப்பை, அம்மி, குழவி போன்ற வேளாண் கருவிகளையும் வெளிப்படுத்தியுள்ளன. பொருந்தல், சிவகளை, கொடுமணல், ஆதிச்சநல்லூர், கீழடி, உறையூர் போன்ற இடங்களின் தொல்லியல் சான்றுகள் வேளாண் உற்பத்தி, தானியச் சேமிப்பு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் பல்வேறு நிலைகளை எடுத்துக்காட்டுகின்றன.

மேலும், வேளாண் உற்பத்தியின் வளர்ச்சி பண்டமாற்று வணிகம், உழவர் சமூக அமைப்பு, தொழில்பிரிவு மற்றும் அரச உருவாக்கம் ஆகியவற்றோடும் தொடர்புடையதாக இருந்தது. எனவே, சங்க கால ஆற்றுச் சமவெளிகளில் வேளாண்மை என்பது உணவு உற்பத்திக்கான தொழிலாக மட்டுமன்றி, சமூகப் பொருளாதார அமைப்பின் அடித்தளமாகவும், தமிழகத்தின் தொடக்ககால அரசியல் மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆதாரமாகவும் விளங்கியது என இவ்வாய்வு முடிவுசெய்கிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. அகநானூறு(தொகுதி.1,2,3),ந.மு.வேங்கடசாமிநாட்டார்,ரா.வேங்கடாசலம்பிள்ளை உரை,கழகவெளியீடு,சென்னை,1969
2. அதியமான்.ந,ஜெயக்குமார்.பா.,(ப.ஆ),கா.ராஜன்(க.ஆ), தமிழகக் கடல்சார் வரலாறு (அண்மைக் கால ஆய்வுகள்),தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,2006
3. இராசமாணிக்கனார்.மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகாதெமி, புது தில்லி, 2012

4. ஐங்குறுநூறு, ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரை, அண்ணாமலைப் பல்கழைக்கழகம், சிதம்பரம்,1957
5. கலித்தொகை, நச்சினாக்கினியர் உரை, கழகவெளியீடு, சென்னை,1962
6. குறுந்தொகை, ரா.இராகவையங்கார் உரை, அண்ணாமலைப் பல்கழைக்கழகம், சிதம்பரம்,1993
7. தொல்காப்பியம்(எழுத்ததிகாரம்), பாவலரேறு ச.பாலசுந்தரம் உரை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்,2012
8. நற்றினை, ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரை, அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை,1968
9. பதிற்றுப்பத்து, ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரை, கழகவெளியீடு, சென்னை,1950(மு.ப),1995
10. பத்துப்பாட்டு(பகுதி-1,2),பொ.வே.சோமசுந்தரனார் உரை, கழகவெளியீடு, சென்னை,2008
11. புறநானூறு(பகுதி-1,2), ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரை, கழகவெளியீடு, சென்னை,1951(மு.ப),2007
12. மாதையன்.பெ., சங்க இலக்கியத்தில் வேளான் சமூதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை,2010
13. ராஜண்.கா.,(க.ஆ), சங்காலம்:தொல்பொருள் ஆய்வுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,சென்னை,2011
14. Mahadevan.Iravatham., Early Tamil Epigraphy, Central Institute of Classical Tamil,Cnennai,2014